Deposition of Witness

**In the court of the Additional Subordinate Judge, Tenkasi.**

Mcop 110/2021

எ .ம.சா.1 செல்வி

| | |
|---|---|
| Name | : செல்வி |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Religion | : |
| Occupation | : |
| Age | : |
| Date | :7.11.23 |

சாட்சி அழைப்பாணையின் பேரில் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை

நான் தற்போது பாவூர்சத்திரம் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. குற்ற எண்.122/18 வழக்கின் முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதியறிக்கை உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது சா.சா.ஆ1. மேற்படி குற்ற வழக்கில் இனம் தெரியாத நபர் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய அந்தோணி பொன்ராஜ் என்பவர் தான் தகவல் கொடுத்துள்ளார். முதல் தகவல் அறிக்கையில் அந்தோணி பொன்ராஜ்க்கு சொந்தமான டி.என்.76ஏ.இ.0209என்ற பதிவு எண் கொண்ட பஜாஜ் பாட்டினா வாகனத்தில் சென்று கொண்டிருந்ததாக கூறியுள்ளார். விசாரணை முடித்து குற்றவாளியை முடிவு செய்ய இயலாததால் காரணம் கூறப்பட்டு இறுதியறிக்கை முடிக்கப்பட்டுள்ளது. நாளது தேதி வரை விபத்திற்கு காரணமான குற்றவாளி யார் என தெரியவில்லை.

மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

இந்த வழக்கில் புலன்விசாரணை அதிகாரி நான் கிடையாது என்றால்

சரிதான். முதல் தகவல் அறிக்கையில் அங்க அடையாளம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இனம் தெரியாத நபர் என குறிப்பிடப்பட்டுள்ளது. வாகனத்தின் எண் குறிப்பிடப்படவில்லை. ஆனால் என்னவகையான வாகனம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தில் காயம்பட்ட நபருக்கு கொடுங்காயம் என்பதால் சட்டபிரிவு மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறுதியறிக்கையில் சட்டபிரிவு மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் புகார் கொடுத்தவர் மீதுஎவ்விததவறும் இல்லை என்றால் சரிதான். முறையாக புலன்விசாரணை செய்திருந்தால் யார் என கண்டுபிடித்திருக்கலாம் என்றால் சரியல்ல. குற்ற இறுதியறிக்கை மீண்டும் மறுதிறப்பிற்கு வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். அதுவரை இனம் தெரியாதுஎன கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான்.